# உதயன் நூலகத்தின் ஆவணங்களை எண்ணிமப்படுத்தும் செயற்திட்டம்

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | உதயன் பத்திரிகை நூலகத்தின் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2023/0006 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாணம், இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2023 ஜூலை - 2024 ஜூலை |
| அறிக்கையிடல் காலம் | 2023 ஜூலை - 2024 டிசம்பர் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலகம் நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | மைத்திரி சபாரெட்ணம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | உதயன் நூலகம் |
| செயற்றிட்டச் செலவுகள் | ரூபா 1,519,384 |

## செயற்றிட்ட அறிமுகம்

இச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கம் உதயன் பத்திரிகை நூலகத்தில் உள்ள நூல்கள், பிரசுரங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தல் ஆகும். இந்நூலகமானது உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே இயங்கி வருவதுடன் பத்திரிகை வெளியீட்டுக்கான உசாத்துணையாகவும் இயங்கி வருகின்றது. பலதரப்பட்ட முக்கிய ஆவணங்கள் இந்நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இந்நூலகச் சேகரம் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் ஒரு முக்கிய முதல்நிலை உசாத்துணை வளமாகப் (primary reference resource) பயன்படும். இந்நூலகத்திலுள்ள ஆவணங்களை ஆவணப்படுத்துவதற்காக இந்தச் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உதயன் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் இருந்து 1985 ம் ஆண்டில் இருந்து வெளிவரும் ஒரு முக்கிய பத்திரிகை ஆகும். அவர்கள் அனுமதியுடன் 12,963 பத்திரிகைகள் (issues) இதுவரை நூலக நிறுவனத்தால் எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து, அணுக்கப்படுத்தப்பட்டுள்ளன.யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பல்வேறு

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நிகழ்வுகளைப் பற்றி அறிந்துகொள்ளுவதற்கும் உதயன் நூலகத்தினை ஆவணப்படுத்துவது முக்கியமாகிறது. இந்த நூலகமானது இந்தியாவில் இருந்து வெளியிடப்பட்ட இலங்கை சார் நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் பிரசுரங்களை கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தினதும், வட பிராந்தியத்தின் ஏனைய பகுதிகளிலும் மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் சடங்குகள், கலைகள், பண்பாடுகள், இலக்கியங்கள் போன்றனவற்றினை இதனூடாக அறிய முடியும்.

நூல்கள், பிரசுரங்கள் மற்றும் சஞ்சிகைகள் மக்கள் பற்றியும், சமூகங்கள் பற்றியும் பல்வேறு தரப்பட்ட விடயங்களை வெளிக்கொண்டு வருகின்றன. அவற்றினை வாசிக்கும் போது ஏற்கனவே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வரும் கருப்பொருள்களைப் பற்றி மேலும் புதிய விடயங்களை நாம் அறியக் கூடியதாக இருக்கும் அதேவேளையில், அந்த ஆய்வுகளை வேறு என்ன திசைகளிலே முன்னெடுக்கலாம் என்பதனை நாம் கண்டறிய முடியும். அது மட்டுமல்லாமல், ஏற்கனவே ஆய்வு செய்யப்படாமல் இருக்கும் விடயங்களை நாம் கண்டறிவதற்கும், புதிய ஆய்வுகளுக்கும் வழிகாட்டக் கூடியன. அந்த வகையிலும் உதயன் பத்திரிகையின் நூலகத்தினை ஆவணப்படுத்துவது மிகவும் முக்கியமான ஒரு முயற்சியாகும்.

இலக்கு

- உதயன் பத்திரிகை நூலகத்தின் ஆவணங்களை முறையாக பட்டியலிட்டு, சர்வதேச நியம எண்ணிமப்படுத்தல் செயல்முறையின் மூலம் எண்ணிமப்படுத்தி பாதுகாத்து, இலவச அணுகலுக்காக வழங்குதல்.

நோக்கம்

- உதயன் நூலகத்தில் உள்ள 1,296 ஆவணங்களையும் 140,400 பக்கங்களையும் திட்டக்காலப்பகுதிக்குள் முறையாக எண்ணிமப்படுத்தி, நூலக விஞ்ஞான முறைகளின் அடிப்படையில் அனைவருக்கும் இலவச அணுகலுக்காக வழங்குதல்.
- அரிய மற்றும் முக்கியமான ஆவணங்களை அடையாளம் கண்டு, அவற்றிற்கான உரிய மீதரவை (metadata) வழங்குதல்.
- எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களை உரிய முறையில் திரும்ப கையளிப்பதுடன் அவற்றின் மென்கோப்புப் பிரதிகளை உதயன் நூலகத்துடன் பகிர்தல்.

செயற்றிட்ட அடைவுகள்

ஜூலை 2023 தொடக்கம் டிசம்பர் 2024 வரையாக காலத்தை கொண்ட உதயன் நூலக எண்ணிமப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் இதுவரை 1305 ஆவணங்களும், 139,920 பக்கங்களும் எண்ணிமப்படுத்தப்பட்டுள்ளன.

| ஆவண வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| அறிக்கைகள் | 55 |
| சமூகவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் | 82 |
| சமயம் சார்ந்தவை | 69 |
| மலர்கள் (விழா மலர், பாடசாலை மலர் , சிறப்பு மலர்) | 88 |
| ஆங்கில இலக்கியம் | 05 |
| தமிழ் இலக்கியம் | 40 |
| நினைவு வெளியீடுகள் | 62 |
| மருத்துவம் மற்றும் நலவியல் | 15 |
| ஏனையவை | 889 |

- உதயன் நூலக எண்ணிமப்படுத்தல் செயற்றிட்டத்தின் மூலம் 1305 ஆவணங்களும் 139,920 பக்கங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- இதுவரைக்கும் 536 நூல்கள் , 161 மலர்கள், 36 பிரசுரங்கள் , 118 இதழ்கள் , 74 நினைவு மலர்கள் , 75 அறிக்கைகள் என்பன எண்ணிமப்படுத்தப்பட்டுள்ளன.
- உதயன் நூலக எண்ணிமப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் அரசியல், பொருளாதாரம், மருத்துவம் , கலை, கலாசாரம் என பல்வேறு துறைகளையும் உள்ளடக்கிய நூல்கள் நூலக விஞ்ஞான நியமங்களை பயன்படுத்தி பகுக்கப்பட்டுள்ளதோடு அனைவருக்கும் இலவச அனுக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வலைத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
- 1985 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை வெளிவந்த 2130 உதயன் பத்திரிகைகள் எண்ணிமப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.
    - உதயன் பத்திரிகை

கற்றல் மற்றும் பரிந்துரைகள்

- ஆவண முக்கியத்துவம் : ஆவணங்களை எண்ணிமப்படுத்தும் முன் அவற்றின் வரலாற்று, கலாச்சார மற்றும் கல்வி முக்கியத்துவத்தை மதிப்பிடுவது அவசியம் என்பதை இந்த திட்டம் வலியுறுத்தியது. உதாரணமாக முக்கியமான பத்திரிகைகள் மற்றும் நூல்களை முன்னுரிமைப்படுத்தி எண்ணிமப்படுத்தியதால், ஆராய்ச்சியாளர்களின் தேவைக்கு துலங்கும் வகையில் முடிவுகள் கிடைத்தன.
- தொழில்நுட்ப சவால்கள் : பழைய ஆவணங்களை (1985–2021) எண்ணிமப்படுத்தும் போது பக்கங்கள் சேதமடையாமல் பாதுகாப்பதற்கு சிறப்பு கவனம் தேவைப்பட்டது.
- கால மேலாண்மை : பெரிய அளவிலான ஆவணங்களை (1,30,000+ பக்கங்கள்) குறிப்பிட்ட காலக்கெடுவில் முடிப்பதற்கு படிப்படியான திட்டமிடல் (Phased Digitization) மிக அவசியமானது. அதன் அடிப்படையில் செயன்முறைகளை மேற்கொள்ளும் போது வெற்றிகரமான முடிவினை அடையலாம்.